2010 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், அவையில் இல்லை. (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது.

வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

84—

தரம் உயர்த்துதல்

***64671—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையைத் தரம் உயர்த்தி நவீன ஆய்வகம் மற்றும் லேப்ராஸ்கோப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் சார்ந்த ஆழியார் நகர் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்தி அதிநவீன ஆய்வகம் மற்றும் லேப்ராஸ்கோப் பிரிவு துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழியார் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெளி நோயாளிகள் ஒரு நாளைக்கு 150 பேர் வருகிறார்கள். ஆழியாரில் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் ஆயிரக்கணக்கிலே வருகிறார்கள். அங்கே ஒரே ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கின்றது. அங்கே எக்ஸ்ரே இல்லை. ஸ்கேன் இல்லை. Lab வசதி இல்லை. அங்கே இருக்கக்கூடிய வெளி

நோயாளிகளுக்குக் கழிப்பிட வசதிகள் இல்லை. போதுமான தண்ணீர் வசதி இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆழியார் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனையை நவீனமயமாக்கி, தரம் உயர்த்த முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கைப்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என தகுதி வாய்ந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக படிப்படியாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. ஆழியார் கூடுதல் ஆரம்ப சுகதார நிலையத்தில் ஒரு காத்திருப்போர் பிரிவு, ஒரு வெளி நோயாளிகள் பிரிவு, ஒரு உள்நோயாளிகள் பிரிவு, ஒரு மருந்தகம், ஒரு பண்டகம், ஒரு மருந்து கட்டும் பிரிவு, ஒரு ஊசி போடும் பிரிவு, ஒரு பிரசவ அறை போன்ற வசதிகள் உள்ளன. அங்கே வருகின்ற நோயாளிகளைக் கணக்கில் கொண்டால், நாள் ஒன்றுக்கு சராசரியாக 100—லிருந்து 133 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், நாள் ஒன்றுக்கு சராசரியாக இரண்டு நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். மேற்சொன்ன நிலையில், ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழியார் ஆரம்ப சுகாதார நிலையம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல ஒரு நாளைக்கு 150 பேர் வருகிறார்கள். அது விவசாயிகள், கூலிகள் நிறைந்த பகுதி. வால்பாறையிலிருந்து தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கீழே வருகின்றபோது பாதிக்கப்பட்டால் அந்த ஆரம்ப சுகதார நிலையத்திற்குத்தான் செல்ல வேண்டும். அதேமாதிரி, நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரிடம் சொல்லி இருக்கின்றேன். வால்பாறை அரசு மருத்துவமனை, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனை, கோட்டூர் அரசு மருத்துவமனை போன்ற

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 23]

மருத்துவமனைகளிலெல்லாம் ஸ்கேன் இல்லை, எக்ஸ்ரே இல்லை. எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். அங்கே கோட்டூரைப் பொறுத்தவரையில், வாரத்திற்கு ஒரே ஒரு டாக்டர்தான் வருகிறார். வேட்டைக்காரன்புதூர் மருத்துவமனையில் பெண் மருத்துவர் இல்லை, அடிப்படை வசதிகளும் இல்லை. இதுமாதிரியான பிரச்சினைகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—நலிந்த, மிகவும் தாழ்த்தப்பட்ட, 99 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கின்ற தொகுதி, வால்பாறை சட்டமன்றத் தொகுதி. அதற்கென்று தனிக் கவனம் செலுத்தி, வால்பாறை அரசு மருத்துவமனை, வேட்டைக்ககாரன்புதூர் அரசு மருத்துவமனை, கோட்டூர் அரசு மருத்துவமனை போன்ற அரசு மருத்துவமனைகளை விரிவுபடுத்தி, அங்கே போதுமான பெண் டாக்டர்களையும் நியமிக்க வேண்டும். ஓட்டுநர்கள்கூட—drivers—இல்லை. அந்தமாதிரியான சூழ்நிலை அந்த மருத்துவமனையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி அதற்கு உதவி புரிய முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் பெரியபோது, வால்பாறை ஆகிய இரண்டு இடங்களிலும் பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, ஆழியார் நகர், பெத்தநாயக்கனூர், சேத்துமடை, டாப் ஸ்லிப், முடீஸ் நகர், சோலையார் நகர் ஆகிய 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இந்த ஒன்றியத்தில், 10 கிலோ மீட்டர் தொலைவில் கோட்டூரில் அரசு மருத்துவமனையும், 15 கிலோ மீட்டர் தொலைவில் வேட்டைக்காரன்புதூரில் அரசு மருத்துவமனையும் இயங்கி வருகின்றன. இந்த அரசு மருத்துவமனைகளில் போதிய வசதிகள் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டதுபோல—தாலுகா மருத்துவமனைகளின் கட்டமைப்புகள் சீரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது—

–அது செய்யப்படும். அதுபோல ஆழியார் நகர் மருத்துவமனையில் ஒரு மருத்துவர்தான் இருக்கிறார் என்று கூறினார். 213 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மருத்துவர்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், அது இரண்டாக தரம் உயர்த்தப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே வெகுவிரைவில் இன்னொரு மருத்துவர் கூடுதலாக நியமிக்கப்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 24 மணி நேரமும் பிரசவ சேவை அந்த மருத்துவமனையில் இருக்கின்றது. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் புற நோயாளிகள் பிரிவு மருத்துவ சிகிச்சைக்காக செயல்பட்டு வருகிறது. மேலும் கூடுதல் வசதி வேண்டுமென்றால் செய்து தருவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

கால்நடை மருத்துவமனை

***38717—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், பரப்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியத்தைச் சார்ந்த பரப்பாடி கிராமத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு